KAYALPATTINAM MUNICIPALITY
FORM 3
Minutes of the Meeting held on 30.06.2011

| Date of the Council Meeting | Decision Number | Subject of the Agenda | Decision of the Council |
|---|---|---|---|
| 30.06.2011 | 36 | **பொருள் எண்: 1**<br>காயல்பட்டணம் நகராட்சியில் கடையக்குடியில் வசிக்கும் திரு.ஏ.கிறிஸ்டோபர் எடிசன் என்பவர் நகராட்சியில் கட்டிடம் கட்ட வேண்டி விண்ணப்பீத்திருந்தார். அன்னாரின் கட்டிடம் சுனாமி எல்கைக்குட்பட்டு வருவதால் மேற்படி கட்டிட வரைபடத்திற்கு அனுமதி வழங்கிட இயலாது. எனவே அன்னார் கட்டிய பணம் ரூ.17,930.00 திரும்ப கோருவதால் அன்னார்க்கு பணம் திரும்ப வழங்கிட மன்றத்தின் அனுமதிக்கு.<br>**அலுவலக குறிப்பு-**<br>கட்டிட வரைபட அனுமதி வழங்காததால் பணம் திரும்ப வழங்கிட | மன்றத்தால் அங்கீகரிக்கப்பட்டது |
| | 37 | **பொருள் எண்: 2**<br>இந்நகராட்சிக்கு சொந்தமான வாகனங்கள் சர்வீஸ் கட்டணம் ரூ.2672.00, நகராட்சி கணிப்பொறிக்கு தேவையான **ANTI VIRUS** சாப்ட்வேர் - ரூ.550.00 நகராட்சி ஆணையாளர் அலுவலக அறையிலுள்ள ஏர் கண்டிசனர் பழுது பார்த்தமைக்கு செலவு செய்த ரூ. 1100.00 மற்றும் தினசரி நாளிதழ்க்கு பில் தொகை ரூ.200.00 ஆக மொத்தம் ரூ.4522.00 செய்தமைக்கு மன்றம் அனுமதி வழங்க.<br>**அலுவலக குறிப்பு-**<br>(1) அனுமதிக்கலாம் (2) அவசர அவசியம் கருதி மேற்படி தொகை வழங்கியமைக்கு மன்றம் ஒப்புதல் வழங்கலாம | அங்கீகரிக்கப்பட்டது |

| | | | |
|---|---|---|---|
| | 38 | **பொருள் எண்: 3**<br>இந்நகராட்சியில் செயல் அலுவலராக பணியாற்றிய திரு.ஜா.மு.அகமது ஆருண் அவர்கள் அன்னாரை தற்காலிக பணிநீக்கம் செய்யப்பட்டதை எதிர்த்து சென்னை உயர்நீதிமன்றத்தில் வழக்கு எண்:-WP No.9720/2011 வழக்கு தொடர்ந்துள்ளார். அவ்வழக்கினை நகராட்சி சார்பில் நடத்துவதற்கு அரசு வழக்கறிஞர்கு வழக்கு செலவுத் தொகையாக ரூ.7500.00 வழங்கியமைக்கு மன்றம் அனுமதி கோரப்படுகிறது.<br>**அலுவலக குறிப்பு-**<br>(1) அனுமதிக்கலாம் (2) அவசர அவசியம் கருதி நகர்மன்ற தலைவர் அவர்களின் முன்னனுமதி பெற்று மேற்படி தொகை வழங்கியதை மன்றம் அங்கீகரிக்கலாம். | அங்கீகரிக்கப்பட்டது |
| | 39 | **பொருள் எண்: 4**<br>இந்நகராட்சியில் வாகன காப்பகம் குத்தகை காலம் 31.03.2011-ன்னுடன் முடிவடைந்துவிட்டது. அவ்விடத்தில் புதிதாக கட்டிடம் கட்டி குத்தகைக்கு விட நகராட்சி மன்றம் தீர்மானித்தது. திரு.M.B.ஜாகிர் உசேன் என்பவர் சென்னை உயர்நீதி மன்ற மதுரை கிளையில் வழக்கு எண்:- WP(MD) No.3059/2011 வழக்கு தொடர்ந்துள்ளார். அவ்வழக்கினை நகராட்சி சார்பில் நடத்துவதற்கு வழக்கறிஞர் திரு.பழ ராமசாமி அவர்களுக்கு வழக்கு செலவு மற்றும் இதரச் செலவினங்களுக்கு செலவு தொகையாக ரூ.8000.00 வழங்கியமைக்கு மன்ற அனுமதி கோரப்படுகிறது.<br>**அலுவலக குறிப்பு-**<br>(1) அனுமதிக்கலாம் (2) அவசர அவசியம் கருதி நகர்மன்ற தலைவர் அவர்களின் முன்னனுமதி பெற்று மேற்படி தொகை வழங்கியதை மன்றம் அங்கீகரிக்கலாம். | அங்கீகரிக்கப்பட்டது |

| | | | |
|---|---|---|---|
| | 40 | **பொருள் எண்: 5**<br>காயல்பட்டணம் நகராட்சியில் 23.06.2011 அன்று நடைபெற்ற பொது ஏலத்தில் காயல்பட்டணம் நகராட்சிக்கு பாத்தியப்பட்ட தினசரி சந்தை ஏலத்தில் கலந்து கொண்ட 7 நபர்களில் சென்ற ஆண்டை விட 60570.00 கூடுதல் தொகையாக ரூ. 91,000.00-த்திற்கு ஏலம் எடுத்த திரு ஜே.கோபால் அவர்களுக்கு ஜாரி செய்திட மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br>**அலுவலக குறிப்பு-**<br>கடந்த ஆண்டை விட கூடுதல் தொகைக்கு ஏலம் கேட்ட திரு.ஜே.கோபால் என்பவர்க்கு வழங்கிட மன்றம் அனுமதிக்கலாம். | அங்கீகரிக்கப்பட்டது |
| | 41 | **பொருள் எண்: 6**<br>காயல்பட்டணம் நகராட்சியில் 23.06.2011 அன்று நடைபெற்ற பொது ஏலத்தில் காயல்பட்டணம் நகராட்சிக்கு சொந்தமான பேருந்து நிலையத்தில் பேருந்துகளுக்கு கட்டணம் வசூல் செய்யும் உரிமம் ஏலத்தில் கலந்து கொண்ட 7 நபர்களில் சென்ற ஆண்டை விட 500.00 கூடுதல் தொகையாக ரூ. 91,500.00-த்திற்கு ஏலம் எடுத்த திரு எம்.அன்சார் அவர்களுக்கு ஜாரி செய்திட மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br>**அலுவலக குறிப்பு-**<br>கடந்த ஆண்டை விட கூடுதல் தொகைக்கு ஏலம் கேட்ட திரு எம்.அன்சார் என்பவர்க்கு வழங்கிட மன்றம் அனுமதிக்கலாம். | |
| | 42 | **பொருள் எண்: 7**<br>காயல்பட்டணம் நகராட்சியில் 23.06.2011 அன்று நடைபெற்ற பொது ஏலத்தில் காயல்பட்டணம் நகராட்சி பகுதியில் உள்ள நெடுஞ்சாலை துறைக்கு பாத்தியப்பட்ட 7 பனைமரம் மற்றும் 1 நாவல் மரத்தின் மேல் மகசூல் உரிமம் ஏலத்தில் கலந்து கொண்ட 2 நபர்களில் சென்ற ஆண்டை விட 80.00 கூடுதல் தொகையாக ரூ. 320.00-த்திற்கு ஏலம் எடுத்த திரு. எல்.அன்சார் அவர்களுக்கு ஜாரி செய்திட மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br>**அலுவலக குறிப்பு-**<br>கடந்த ஆண்டை விட கூடுதல் தொகைக்கு ஏலம் கேட்ட திரு. எல்.அன்சார் என்பவர்க்கு வழங்கிட மன்றம் அனுமதிக்கலாம | அங்கீகரிக்கப்பட்டது |

| | | | |
|---|---|---|---|
| | 43 | **பொருள் எண்: 8**<br>காயல்பட்டணம் நகராட்சியில் 23.06.2011 அன்று நடைபெற்ற பொது ஏலத்தில் காயல்பட்டணம் நகராட்சி பகுதியில் உள்ள உப்பு ஓடை மச்ச குத்தகை ஏலத்தில் கலந்து கொண்ட 2 நபர்களில் சென்ற ஆண்டை விட ரூ.30.00 கூடுதல் தொகையாக ரூ. 250-த்திற்கு ஏலம் எடுத்த திரு. ஜி.செல்வன் அவர்களுக்கு ஜாரி செய்திட மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br>**அலுவலக குறிப்பு-**<br>கடந்த ஆண்டை விட கூடுதல் தொகைக்கு ஏலம் கேட்ட திரு. ஜி.செல்வன் என்பவர்க்கு வழங்கிட மன்றம் அனுமதிக்கலாம். | அனுமதிக்கப்பட்டுளள து |
| | 44 | **பொருள் எண்: 9**<br>காயல்பட்டணம் நகராட்சியில் 23.06.2011 அன்று நடைபெற்ற பொது ஏலத்தில் காயல்பட்டணம் நகராட்சி பகுதி பேருந்து நிலையத்தில் தென்னை மரங்கள் மேல் மகசூல் உரிமம் ஏலத்தில் கலந்து கொண்ட 2 நபர்களில் ஆண்டை விட ரூ.100.00 கூடுதல் தொகையாக ரூ. 3100.00-த்திற்கு ஏலம் எடுத்த திரு. எம்.ஈனன் அவர்களுக்கு ஜாரி செய்திட மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br>**அலுவலக குறிப்பு-**<br>கடந்த ஆண்டை விட கூடுதல் தொகைக்கு ஏலம் கேட்ட திரு திரு. எம்.ஈனன் என்பவர்க்கு வழங்கிட மன்றம் அனுமதிக்கலாம். | அங்கீகரிக்கப்பட்டது |
| | 45 | **பொருள் எண்: 10**<br>காயல்பட்டணம் நகராட்சியில் 23.06.2011 அன்று நடைபெற்ற பொது ஏலத்தில் காயல்பட்டணம் நகராட்சியில் சேகரிக்கப்பட்ட நாளிதழ்களை கலந்து கொண்ட 20 நபர்களில் சென்ற ஆண்டை விட ரூ.2.00 அதிகபட்சமாக கிலோ ஒன்றுக்கு ரூ.9.00-க்கு ஏலம் கேட்ட திரு.ஏ.ஜெயபால் என்பவர்க்கு ஜாரி செய்திட மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br>**அலுவலக குறிப்பு-**<br>கூடுதல் தொகைக்கு ஏலம் கேட்ட திரு. ஏ.ஜெயபால் என்பவர்க்கு வழங்கிட மன்றம் அனுமதிக்கலாம். | அங்கீகரிக்கப்பட்டது |

<table>
<tr><td></td><td>46</td><td>பொருள் எண்: 11<br><br>காயல்பட்டணம் நகராட்சியில் 23.06.2011 அன்று நடைபெற்ற பொது ஏலத்தில் காயல்பட்டணம் நகராட்சியில் சேகரிக்கப்பட்ட உபயோகத்திற்கு லாயக்கற்ற குழல் விளக்குகள், சோக்குகள் மற்றும் ஸ்டார்டர்கள் ஏலத்தில் கலந்து கொண்ட 24 நபர்களில் அதிகபட்சமாக ரூ.10210.00-க்கு ஏலம் கேட்ட ஜே.கோபால் என்பவர்க்கு ஜாரி செய்திட மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>அலுவலக குறிப்பு-<br><br>கூடுதல் தொகைக்கு ஏலம் கேட்ட ஜே.கோபால் என்பவர்க்கு வழங்கிட மன்றம் அனுமதிக்கலாம்.</td><td>அங்கீகரிக்கப்பட்டது</td></tr>
<tr><td></td><td>47</td><td>பொருள் எண்: 12<br><br>காயல்பட்டணம் நகராட்சியில் 23.06.2011 அன்று நடைபெற்ற பொது ஏலத்தில் காயல்பட்டணம் நகராட்சியில் சேகரிக்கப்பட்ட உபயோகத்திற்கு லாயக்கற்ற குடிநீர் உதிரி சாமான்கள் ஏலத்தில் கலந்து கொண்ட 26 நபர்களில் அதிகபட்சமாக கிலோ ஒன்றுக்கு ரூ.11.10-க்கு ஏலம் கேட்ட கே.ஜே.எஸ். காதர் என்பவர்க்கு ஜாரி செய்திட மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>அலுவலக குறிப்பு-<br><br>கூடுதல் தொகைக்கு ஏலம் கேட்ட கே.ஜே.எஸ். காதர் என்பவர்க்கு வழங்கிட மன்றம் அனுமதிக்கலாம்.</td><td>அங்கீகரிக்கப்பட்டது</td></tr>
</table>

| | | | |
|---|---|---|---|
| | 48 | **பொருள் எண்: 13**<br>காயல்பட்டணம் நகராட்சியில் 23.06.2011 அன்று நடைபெற்ற பொது ஏலத்தில் காயல்பட்டணம் நகராட்சி ஆடு மாடு அறுக்கும் தொட்டியில் சேகரிக்கப்பட்ட உதப்பை ஏலத்தில் கலந்து கொண்ட 24 நபர்களில் அதிகபட்சமாக ரூ.230-க்கு ஏலம் கேட்ட சுரேஷ் என்பவர்க்கு ஜாரி செய்திட மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br>**அலுவலக குறிப்பு-**<br>கூடுதல் தொகைக்கு ஏலம் கேட்ட சுரேஷ் என்பவர்க்கு வழங்கிட மன்றம் அனுமதிக்கலாம | அங்கீகரிக்கப்பட்டது |
| | 49 | **பொருள் எண்: 14**<br>இந்நகராட்சிக்கு தேவையான தளவாட சாமான்கள் 2011-12-ம் ஆண்டுக்கு வடக்கன்குளம் கூட்டுறவு அச்சகம் மூலம் அவசர அவசியம் கருதி பொருட்கள் வாங்கியதையும் அதற்கான தொகை பில்படி வழங்கியதற்கும் மன்றம் அனுமதி கோரப்படுகிறது.<br>**அலுவலக குறிப்பு-**<br>(1) அனுமதிக்கலாம்<br>(2) அவசர அவசியம் கருதியும் போதுமான தளவாட சாமான்கள் இருப்பில் இல்லாத காரணத்தினாலும் வடக்கன்குளம் கூட்டுறவு அச்சகத்திலிருந்து நேரடியாக தளவாட சாமான்கள் வாங்கியதையும் மன்றம் அனுமதிக்கலாம்.<br>(3) கூட்டுறவு அச்சகத்தின் பட்டியல்படி தொகை ரூ.107930.00 வழங்கியதையும் மன்றம் அங்கீகரிக்கலாம். | அங்கீகரிக்கப்பட்டது |
| | 50 | **பொருள் எண்: 15**<br>காயல்பட்டணம் நகராட்சியின் மார்ச், எப்ரல் மற்றும் மே - 2011-ம் மாத செலவினங்களை மன்றம் அங்கீகரிக்க.<br>**அலுவலக குறிப்பு:-**<br>செலவுச் சீட்டுகளை மன்றம் அங்கீகரிக்கலாம். | அங்கீகரிக்கப்பட்டது |

| | | | |
|---|---|---|---|
| | 51 | **பொருள் எண்: 16**<br>காயல்பட்டணம் நகராட்சியில் கீழ்க்கண்ட இடங்களில் குடிநீர் விநியோகம் செய்ய குடிநீர் குழாய்கள் பதிக்க வேண்டும் என்ற நகராட்சி குழாய் பொருத்துநர் குறிப்புரையின் அடிப்படையில் நகராட்சி பணி மேற்பார்வையாளர் மற்றும் நகராட்சி பொறியாளர் அவர்களால் தயாரிக்கப்பட்ட மதிப்பீடுகள் மன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும். | அங்கீகரிக்கப்பட்டது |

| **வ.எண்** | **வேலையின் பெயர்** | **நீளம் (கீ.மீ.)** | **மதிப்பீடு (இலட்சத்தில்)** |
|---|---|---|---|
| 1. | கோமான் புதூரில் குடிநீர் குழாய் விஸ்தரிப்பு செய்தல் | 0.050 | 0.08 |
| 2. | கடையக்குடியில் குடிநீர் குழாய் விஸ்தரிப்பு செய்தல் | 0.500 | 0.65 |
| 3. | காயிதே மில்லத் நகரில் குடிநீர் குழாய் விஸ்தரிப்பு செய்தல் | 0.300 | 0.40 |
| 4. | பூந்தோட்டத்தில் குடிநீர் குழாய் விஸ்தரிப்பு செய்தல் | 0.100 | 0.13 |
| 5. | நயினார் தெருவில் குடிநீர் குழாய் விஸ்தரிப்பு செய்தல் | 0.200 | 0.25 |
| 6. | இசக்கியம்மன் கோவில் தெரு (கோமான்புதூர்) குடிநீர் குழாய் விஸ்தரிப்பு செய்தல் | 0.100 | 0.13 |
| 7. | உச்சிமாகாளியம்மன் கோவில் தெருவில் | 0.350 | 0.45 |

| | | | |
|---|---|---|---|
| | குடிநீர் குழாய் விஸ்தரிப்பு செய்தல் | | |
| 8. | ரத்தினாபுரி முதல் டிரைவர் காலனி வரை குடிநீர் குழாய் விஸ்தரிப்பு செய்தல் | 0.500 | 0.65 |
| 9. | கீழநெயினார் தெருவில் குடிநீர் குழாய் விஸ்தரிப்பு செய்தல் | 0.200 | 0.30 |
| 10. | கடற்கரை தெருவில் குடிநீர் குழாய் விஸ்தரிப்பு செய்தல் | 0.300 | 0.43 |
| 11. | பாக்கர் காலனி தெருவில் குடிநீர் குழாய் விஸ்தரிப்பு செய்தல் | 0.200 | 0.26 |
| | **மொத்தம்** | **2.80** | **3.73** |

**அலுவலக குறிப்பு-**

மேற்கண்ட பணிகளுக்கு நகராட்சி பணிமேற்பார்வையாளர் மற்றும் நகராட்சி பொறியாளர்(பொ) அவர்களால் தயாரிக்கப்பட்ட மதிப்பீடுகளுக்கு ஒப்புதல் வழங்கலாம்.

| | | | |
|---|---|---|---|
| | 52 | **பொருள் எண்: 17**<br>காயல்பட்டணம் நகராட்சியில் பொதுநிதிபணிகள் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டப் பணிகள், சிறப்பு சாலைத் திட்டப் பணிகள் போன்ற திட்டங்களில் நடைபெறும் திட்டப் பணிகளை மேற்பார்வையிடவும் சட்ட மன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டம் 2011-12, பொது நிதி திட்டம் 2011-12 மற்றும் பாரளுமன்ற உறுப்பினர் உள்ளுர் வளர்ச்சீ திட்டம் 2011-12 போன்ற திட்டங்களுக்கு மதிப்பீடுகள் தயாரிக்கவும் நகராட்சி பணி மேற்பார்வையாளர் அவர்களுக்கு உதவியாக தொழில்நுட்ப உதவியாளர் எவரும் இல்லாததாலும் ஏற்கனவே நகராட்சியில் தொழில் நுட்ப உதவியாளராக பணியாறறி வரும் திரு.K.செந்தில்குமார் என்வரை 01.06.2011 முத்ல 31.08.2011 வரை பணியமர்த்திக் கொள்ள நகராட்சி பணி மேற்பார்வையாளர் மற்றும் நகராட்சி பொறியாளர்(பொ) அவர்களால் தயாரிக்கப்பட்ட உத்தேச மதிப்பீடு ரூ. 20,000/-க்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br>**அலுவலக குறிப்பு-**<br>திரு.K.செந்தில் குமார் என்பவரை 01.06.2011 முதல் 31.08.2011 வரை பணியமர்த்திக் கொள்ள நகராட்சி பணி மேற்பார்வையாளர் மற்றும் நகராட்சி பொறியாளர்(பொ) அவர்களால் தயாரிக்கப்பட்ட ரூ.20,000/-க்கான உத்தேச மதிப்பீட்டிற்கு மன்றம் ஒப்புதல் வழங்கலாம | அங்கீகரிக்கப்பட்டது |
| | 53 | **பொருள் எண்: 18**<br>தூத்துக்குடி மாவட்ட ஆட்சியரால் மாவட்டத்தில் மிகவும் பின்தங்கிய, உடல் ஊனமுற்ற மற்றும் ஏழை எழியோர்க்கு செய்யப்படும் மருத்துவ உதவி ஆதரவற்ற குழந்தைகளுக்கான கவ்வி செலவினங்கள் மற்றும் இயற்கை பேரழிவு தொடர்பாக செய்யப்படும் செலவு தொகையில் நகராட்சியின் பங்குத் தொகையாக ரூ. 25000/- செலுத்தும்படி பார்வையில் காணும் கடிதங்களில் அறிவுறுத்தப்பட்டது. எனவே அதன் மேல்நடவடிக்கைகாக தூத்துக்குடி மாவட்ட நலக்குழுவிற்கு ரூ.25000/-ஐ நகராட்சி பொதுநிதியில் இருந்து வங்கி வரைவோலையாக அனுப்பி வைக்க(Thoothukudi District Welfare Committee) அறிவுறுத்தப்பட்டு நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநரகத்திலிருந்து வரப்பெற்ற கடிதம் மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.<br>**அலுவலக குறிப்பு-**<br>மன்றம் அனுமதிக்கலாம். | அங்கீகரிக்கப்பட்டது |

| | | | |
|---|---|---|---|
| | | | |
| | 54 | **பொருள் எண்: 19**<br>காயல்பட்டணம் நகராட்சிப் பகுதி கற்புடையாளர் பள்ளி வட்டம் (சிங்கித்துறை) பகுதியில் தமிழ்நாடு குடிசை மாற்று வாரியம், திருநெல்வேலி கோட்டம் மூலம் கட்டப்பட்டு வரும் 169 சுனாமி குடியிருப்புகளுக்கு நகராட்சியின் மூலம் வீட்டுக்குடிநீர் இணைப்பு வழங்குவதற்கு ஆகும் செலவினத் தொகையினை தெரிவிக்குமாறும், 169 சுனாமி குடியிருப்புகள் கட்டப்பட்டுவரும் பகுதிக்கு அவர்களால் அங்கீகரிக்கப்பட்ட மனைப்பிரிவு வரைபடத்தை அடிப்படையாக கொண்டு தெருவிளக்குகள் அமைப்பதற்கு ஆகும் செலவினை மின்வாரிய அலுவலகத்தைத் தொடர்பு கொண்டு தெரிவிக்குமாறும் உதவிப்பொறியாளர், தமிழ்நாடு குடிசை மாற்று வாரியம், திருநெல்வேலி கோட்டம், திருநெல்வேலி அவர்களிடமிருந்து வரப்பட்ட கடிதம் ந.க.எண்:-101/உ.பொ/கு.மா.வா/நாள்:-06.06.2011 மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.<br>**அலுவலக குறிப்பு-**<br>மன்றம் பார்வையிட்டு முடிவு செய்யலாம். | மேற்கண்ட பொருளில் கூறப்பட்ட 169 குடியிருப்புகளை கட்டுவதற்கு நீதிமன்றம் இது சம்பந்தமாக நீதிமன்றத்தில் வழக்கு நிலுவையில் இருப்பதினால் மேற்கூறப்பட்ட கடித கோரிக்கை தற்போது தேவையில்லை என்று மன்றம் ஏகமனதாக நிராகரிக்கப்பட்டது |
| | | | |
| | | | |
| | | | |